## திருவாரூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (24.02.2016 முதல் 28.02.2016 வரை)

**தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை – 612101**
போன் : 0435 2472098 E-mail: dirtrri@tnau.ac.in - Fax: 04352472881

==========================================================================

தேதி :23.02.16

**கடந்த 4 நாளில் நிலவிய வானிலை (19.02.2016 – 22.02.2016)**

| காரணிகள் | கடந்த வார வானிலை |
|---|---|
| மழை (மி.மீ) | 0.0 |
| அதிகபட்ச வெப்பநிலை(டி.செ) | 33 – 35 |
| குறைந்தபட்ச வெப்பநிலை(டி.செ) | 25 |
| மேக மூட்டம் | 4 |
| ஈரப்பதம் (%) | 58 – 84 |
| காற்றின் வேகம் (கி.மீ.) | 3 |

**அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு**

| காரணிகள் | எதிர்பார்க்கப்படும் வானிலை | | | | |
|---|---|---|---|---|---|
| | தேதி-1 24/02/16 | தேதி-2 25/02/16 | தேதி-3 26/02/16 | தேதி-4 27/02/16 | தேதி-5 28/02/16 |
| மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| அதிகபட்ச வெப்பநிலை(டி.செ) | 35 | 35 | 35 | 34 | 34 |
| குறைந்தபட்சவெப்பநிலை(டி.செ) | 25 | 25 | 25 | 24 | 24 |
| மேக மூட்டம் | 4 | 4 | 4 | 4 | 4 |
| ஈரப்பதம் (%) | 61 – 83 | 61 – 83 | 61 – 83 | 65 – 85 | 65 – 85 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணிக்கு) | 3 | 3 | 3 | 3 | 3 |
| காற்றின் திசை | தென்கிழக்கு | தென்கிழக்கு | தென்கிழக்கு | தென்கிழக்கு | தென்கிழக்கு |

24.02.2016 முதல் 28.02.2016 வரை வானம் சற்று மேகமூட்டத்துடன் காணப்படும். மழை இல்லை.

***வேளாண் அறிவுரைகள் :***

**முக்கிய பயிர்: நெல்**

**தாளடி: முதிர்ச்சி மற்றும் அறுவடை பருவம்;**

**நெல் தரிசு-பயறு : வளர்ச்சி மற்றும் பூக்கும் பருவம்**

- அடுத்த ஐந்து நாட்களுக்கு வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுவதால் அறுவடை நிலையில் உள்ள தாளடி நெல்லினை அறுவடை செய்து நன்கு காய வைத்து ஈரத்தன்மை 13 சதவீதத்திற்கு கீழ் இருக்குமாறு சேமித்து வைத்து பூச்சிகள் இல்லாமல் பாதுகாக்கவும்.
- பூக்கும் நிலையில் உள்ள நெல் தரிசு பயிறுவகைகளுக்கு பண்ணைக்குட்டை அல்லது தண்ணீர் வசதி உள்ள இடங்களில் நீர்த் தெளிப்பான் மூலம் நீர் தெளிக்கவும்.
- நெல் தரிசு பயிறுவகைப் பயிர்களில் பூக்கும் தருணத்தில் இலைவழி தெளிப்பாக பயறு அதிசயம் ஏக்கருக்கு 2 கிலோ அல்லது டி.ஏ.பி கரைசல் 20 கிராம் / லிட்டர் பூக்கும் தருணத்திலும், 15 நாட்கள் இடைவெளியிலும் தெளிக்கவும்.
- மாசி பட்டத்தில் எள் விதைப்பதற்கு திண்டிவனம் 4, திண்டிவனம் 7, மற்றும் விருத்தாசலம் 1 ரகங்கள் ஏற்றவை.

**கால்நடைகளுக்கு**

- கால்நடைகளுக்கு புல்மீது உள்ள பனித்துளிகள் காய்ந்தப் பிறகு மேய்ச்சலுக்கு விடுவதால் ஒட்டுண்ணி புழுக்கள் தாக்காமல் பாதுகாக்கப்படுகிறது.

**இயக்குநர்**